முற்பகல் 10–10

அதேபோன்று மாற்றுத் திறனாளிகள் அனைவருக்குமான உதவித் தொகையை கருணை கொண்டு, ரூ.1,000/–லிருந்து ரூ.1,500/- ஆக தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்கள் உயர்த்தி வழங்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை குறித்து நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்தாலோசித்து, அவருடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, அரசு உரிய முடிவெடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 13, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

13—

பேருந்து வசதி

***448—முனைவர் கோவி. செழியன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணத்திலிருந்து திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள், பந்தநல்லூர் வழியாக திருமங்கைச்சேரிக்கு காலை மற்றும் மாலை நேரங்களில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தலைவர் அவர்களை வணங்கி, திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், திருமங்கைச்சேரிக்கு தமிழ்நாடு

2021 செப்டம்பர் 2]

அரசுப் போக்குவரத்துக் கழகம், கும்பகோணம் மண்டலம், கும்பகோணம் நகர்–I கிளையிலிருந்து தடம் எண் A–64 மற்றும் A–54 மூலம் காலை 5–30 மணி, 9–20 மணி மற்றும் மாலை வேளைகளில் 15–15 மணி, 17–15 மணி ஆகிய நேரங்களில் நகரப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், கூடுதலாக நடைகள் இயக்கினால் ஏற்கெனவே பயனடைந்து வரும் பந்தநல்லூர் தடத்திலுள்ள பொது மக்கள் பாதிக்கப்படுவார்கள். எனவே, தற்போதுள்ள பேருந்து வசதியே போதுமானதென்று இத்துறை கருதுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.*

முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோட்டு பூகம்பம், தந்தை பெரியாராய், பேரறிஞர் அண்ணாவாய், வாழும் தலைவராக நாங்கள் கருதுகிற கலைஞராக எங்களை வழிநடத்துகிற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் சட்டமன்றத் தொகுதியில் கும்பகோணத்திலிருந்து பந்தநல்லூர் என்ற பகுதி திருப்பனந்தாள் ஒன்றியத்தினுடைய மையப் பகுதி. சுற்றுவட்டார 10 ஊராட்சி மற்றும் 120 குக்கிராமங்கள் உள்ளடங்கிய பகுதி. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப்போல, 3 வழித்தடங்களில் பேருந்துகள் இயக்கப்பட்டாலுங்கூட, அதிகமான பொது மக்கள், விவசாயிகள், மாணவ, மாணவியர்கள் பயன்படுத்தக்கூடிய ஒரு சூழல் திருமங்கைச்சேரி கிராமத்திற்கு இருக்கிறது. எனவே, கடந்த காலங்களில் நிறுத்தப்பட்ட இரண்டு வழித்தடங்களை மீண்டும் வழங்குமாறு மாண்புமிகு அமைச்சரிடமும், மாண்புமிகு முதலமைச்சரிடமும் கோரிக்கை வைத்தேன். ஆடுதுறையிலிருந்து கும்பகோணம், சுவாமிமலை ஒரு வழித்தடம், கும்பகோணத்திலிருந்து போடக்குடி ஆகிய இரு வழித்தடங்களை எனக்கு வழங்கினீர்கள். எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்கிக் கொண்டிருக்கிறீர்கள். தேவையறிந்து பணியாற்றுகிற தமிழக அரசின் போக்குவரத்துத் துறை, சொல்லிய காரணம் கூடுதலாக இருந்தாலுங்கூட, பொது மக்கள் நலன் கருதி, கும்பகோணத்திலிருந்து திருமங்கைச்சேரி என்ற ஊருக்கு பந்தநல்லூர் வழியாக புதிய வழித்தடத்தை அமைத்துத் தந்து மக்களுக்கு உதவுமாறும், அதைச் செய்வீர்களா என்பதை*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமங்கைச்சேரி என்பது பந்தநல்லூரிலிருந்து இரண்டரை கிலோ மீட்டர் தூரத்திலே இருக்கின்றது. அவர் extension கேட்கிறார். மாண்புமிகு முதல்வர் அவர்களோடு கலந்து பேசி, போக்குவரத்துத் துறையினுடைய மேலாண் இயக்குநரோடும் கலந்து பேசி, பந்தநல்லூரிலிருந்து திருமங்கைச்சேரி வரை extension கொடுப்பதற்குரிய ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

முனைவர் கோவி. செழியன்: கேட்டதையெல்லாம் கொடுக்கின்ற இந்த ஆட்சியில் கோரிக்கை வைத்தவுடன் நிறைவேற்றித் தரப்படும் என்ற பதிலைத் தந்திருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றி. காரணம், போக்குவரத்துத் துறை நஷ்டத்திலே இயங்கினாலுங்கூட, ஏழையெளிய மக்கள் பயன்படக்கூடிய வகையில் பல்வேறு திட்டங்களைத் தந்தவர் நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள். ஆயிரம்விளக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினராக அவர் இருந்தபோதுதான் சட்டமன்றத்தில், +2 வரை படிக்கிற மாணவ, மாணவிகளுக்கு இலவச பஸ் பாஸ் வேண்டுமென்று கேட்டார். அன்றைய முதல்வர் வழங்கினார். தேர்தல் நேரத்தில், பெண்களுக்கு கட்டணமில்லாத பேருந்து பயணம் என்று சொன்னார். அதையும் உடனடியாக நிறைவேற்றி, இன்றைக்கு தமிழகத்திலே பேருந்துகளில் நூற்றுக்கு 70 சதவிகிதம் பெண்களே பயணம் செய்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற ஒரு மறுமலர்ச்சியை உருவாக்கியது நம்முடைய தமிழக அரசும், தமிழக முதல்வர் அவர்களும். கழகத் தலைவர், தமிழக முதலமைச்சராக இருந்தபொழுது, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இரண்டு புதிய வழித்தடங்களை உருவாக்கித் தந்தார். எனவே, கேட்டதையெல்லாம் கொடுக்கிற முதலமைச்சர் அவர்கள், 'extension' என்ற அந்த வார்த்தையை சற்று திருத்தம் செய்து, அதை

மீண்டும் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அந்த 'extension' என்ற வார்த்தையை மாற்றி, கும்பகோணத்திலிருந்து பந்தநல்லூர் வழியாக திருமங்கைச்சேரிக்கு புதிய வழித்தடத்தை அமைத்துத் தர வேண்டுமென்பதை மாண்புமிகு முதலமைச்சருடைய கருணையோடு, அமைச்சர் அவர்களை, உங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன், நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு நிச்சயமாக நல்ல பதில் கிடைக்கும். நான் ஏற்கெனவே சொன்னபடி, 'கலந்து பேசி முடிவெடுக்கப்படும்' என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அவர் அதைப்பற்றி கிஞ்சித்தும் கவலைப்பட வேண்டாம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். நிச்சயமாக நடக்கும். 'கேட்டதெல்லாம் கொடுப்பார்' என்று அவர்தான் சொல்லிவிட்டாரே! ஆகவே, நடக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார் அவர்கள்.

திரு. கி. அசோக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதி, கிருஷ்ணகிரி ஒன்றியத்திற்குட்பட்ட ஒன்றியப்பள்ளி ஊராட்சி, தானம்பட்டி கிராமத்தில் 500 குடும்பங்கள் வசித்து வருகின்றன. இந்தக் கிராமத்திற்கு 13B, 19A ஆகிய இரண்டு நகரப் பேருந்துகள் வந்து கொண்டிருந்தன. தற்போது இந்தப் பேருந்துகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. எனவே, பேருந்துகளை மீண்டும் இந்த அரசு இயக்குவதற்கு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியானது தஞ்சை

மாவட்டத்திற்குரிய கொறடா அவர்கள் கேட்ட கேள்வி. இருந்தாலும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே இரண்டு பேருந்துகள் அங்கு இயங்குவதாகச் சொல்கின்றார். அவர், தனிக் கேள்வி போட்டால் இதுபோன்ற கேள்விகளுக்கு பதில் சரியாகக் கிடைக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 14, மாண்புமிகு உறுப்பினர் திரு. V.P. கந்தசாமி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

14—

ஜவுளிச் சந்தை

***1717—திரு. V.P. கந்தசாமி:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சூலூர் தொகுதி, சோமனூரில் புதியதாக ஜவுளிச் சந்தை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) முத்தமிழறிஞர், என் தெய்வம் கலைஞர் அவர்களின் நினைவிடம் அமைக்க ரூ.39 கோடி நிதி ஒதுக்கிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சூலூர் தொகுதி, சோமனூரில் புதிதாக ஜவுளிச் சந்தை அமைத்திட இதுவரை தொழில் முதலீட்டாளர்களிடமிருந்து கோரிக்கை எதுவும் பெறப்படாததால் இப்பொருள் தொடர்பான முன்மொழிவுகள் எதுவும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. V.P. கந்தசாமி அவர்கள்.*